மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், காரியாபட்டி,
**முன்னிலை : திரு.க.யோகேஷ்வரன், B.A., L.L.B,**
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
காரியாபட்டி.
2026 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 16 ஆம் நாள் செவ்வாய்கிழமை

**இடைநிலை மனு எண்.9/2026**
IN
**அசல் வழக்கு எண். 18/2024**

1. தௌடன்
2. சந்திரன்
3. சிவராமன்
4. மார்நாடு
5. சேதுராமலிங்கம் **... மனுதாரர்கள்/ 4 முதல் 8 வரையுள்ள பிரதிவாதிகள்**

(மேற்படி மனுதாரர்கள் தங்களுக்காகவும், அரசகுளம் கிராமத்தில் வசிக்கும் பொதுமக்களின் பிரதிநிதிகள் மற்றும் மேற்படி ஊரில் உள்ள பெரியகருப்பணசாமி மற்றும் சின்னகருப்பணசாமி கோவில்களில் வழிபாடு உரிமைக் கொண்டவர்களின் பிரதிநிதிகள் ஸ்தானத்திலும்)

**/எதிர்/**

1.பருவத்தமாள் (**இறப்பு**)
2. பிச்சை
3. குருசாமி
4. முத்து
5. சுப்பிரமணி
6. அம்சவள்ளி
7. தமிழ்செல்வி
8. புவனேஸ்வரி
9. சாவித்திரி ..... **எதிர்மனுதாரர்கள்/ வாதிகள்.**

10. வருவாய் வட்டாட்சியர், காரியாபட்டி.
11. வருவாய் கோட்டாட்சியர், அருப்புக்கோட்டை
12.தமிழ்நாடு அரசு அதன் பிரதிநிதியான
விருதுநகர் ஆட்சித்தலைவர் மூலம், விருதுநகர். ..... **10 முதல் 12 வரையுள்ள எதிர்மனுதாரர்கள்/ 1 முதல் 3 வரையுள்ள பிரதிவாதிகள்**

இம்மனுவானது 10.06.2026 ம் தேதி கோப்பிற்கு எடுக்கப்பட்டு, இறுதி விசாரணைக்காக இந்நீதிமன்றத்தின் முன்னர் 10.06.2026 வந்தபோது, மனுதாரர்கள்/ 4 முதல் 8 வரையுள்ள பிரதிவாதிகள் தரப்பில், கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.பார்த்தசாரதி அவர்களும், 3 ம்எதிர்மனுதாரர்/ வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. V.குருசாமி அவர்களும், 10 முதல் 12 வரையுள்ள எதிர்மனுதாரர்கள்/ 1 முதல் 3 வரையுள்ள பிரதிவாதிகள் தரப்பில் அழைத்தும் ஆஜர் இல்லாததால் ஒருதலைப்பட்சமாக்கப்பட்டுள்ள நிலையிலும் இருதரப்பினரும் செய்து கொண்ட இரு தரப்பு வாதங்களை கேட்டறிந்தும், மனு மற்றும் அசல் வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையின் கீழ் இருந்து வந்த இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

## உத்தரவு

1. உரிமையியல் விசாரணை முறைச்சட்டம் ஆர்டர் 8 ரூல் 1 (a)3 மற்றும் பிரிவு 151ன் கீழ் அசல் வழக்கில் மனுவில் தாக்கல் செய்துள்ள அசல் ஆவணங்களை மனுதாரர்களுடைய சாட்சியத்தில் சான்றாவணங்களாக குறியீடு செய்ய அனுமதித்து உத்தரவிட வேண்டி மனு தாக்கல்.

## 2.மனுதாரர்கள் தரப்பு மனுவின் சுருக்கம்:-

மனுதாரர்கள் தரப்பில், மனுதாரர்கள் பிரதிநிதிகள் ஸ்தானத்தில் வழக்கில் தரப்பினராக சேர மனு தாக்கல் செய்த காலத்தில் தாவா சொத்துக்களில் ஏற்பட்ட ஆக்கிரமிப்புகள், சம்பந்தப்பட்டு, வருவாய்த்துறை, ஊரக வளர்ச்சித்துறை மற்றும் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் ஏற்பட்ட உத்தரவின் நகல்களை தாக்கல் செய்துள்ளார்கள். மேற்படி ஆவணங்கள் தான் இவ்வழக்கின் முக்கியமான ஆவணங்களாகும். தாவா வழக்குகளில் கட்டுப்பட்ட சொத்துக்கள் ஊர் பொதுச்சொத்து என்பதால் திருவிழா காலங்களில் அதிகாரிகள் பிறப்பித்த உத்தரவின் அசல் தேவைப்படும் என்பதால் நகல்களை மட்டுமே தாக்கல்

செய்திருந்தோம். மேற்படி அசல் ஆவணங்கள் தான் அசல் வழக்கில் மனுதாரர்களின் தரப்பை நிரூபிக்க தேவையான முக்கியமான ஆவணங்களாகும். மேற்படி அசல் ஆவணங்களை எதிர்வழக்குரை தாக்கல் செய்யும் காலத்திலே தாக்கல் செய்யாமல் போனது வேண்டுமென்றே ஏற்பட்டதல்ல. எனவே, மனுவுடன் தாக்கல் செய்துள்ள அசல் ஆவணங்களை மனுதாரருடைய சாட்சியத்தில் சான்றாவணங்களாக குறியிடு செய்ய அனுமதிக்க வேண்டி மனுதாரர்கள் இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்கள்.

**3. <u>3 ம் எதிர்மனுதாரர் தரப்பு மறுப்புரையின் சுருக்கம்:-</u>**

3 ம் எதிர்மனுதாரர் தரப்பில், மனுதாரர்கள் மனுவுடன் தாக்கல் செய்துள்ள ஆவணங்களில் தானும், மற்ற வாதிகளும் தரப்பினர்கள் இல்லை என்பதால் மேற்படி மனுவானது சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல. மேலும், மனுதாரர்கள் மனுவுடன் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் யாவும் இந்த வழக்கிற்கு சிறிதும் அவசியமற்ற ஆவணங்களாகும். எனவே, மனுதாரர்களின் மனுவானது இந்த எதிர்மனுதாரரின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டும்.

**4. <u>தீர்வு காணவேண்டிய பிரச்சனை:-</u>**

இம்மனு அனுமதிக்கத்தக்கதா?

**<u>5. தீர்வு முடிவு:-</u>**

5(1).இம்மனு, எதிருரை, வழக்காவணங்கள் பரிசீலிக்கப்பட்டன. இருதரப்பு வாதங்களும் கவனத்தில் கொள்ளப்பட்டன.

5(2). மனுதாரர்கள் தரப்பில், தாவா வழக்குகளில் கட்டுப்பட்ட சொத்துக்கள் ஊர் பொதுச்சொத்து என்பதால் திருவிழா காலங்களில் அதிகாரிகள் பிறப்பித்த உத்தரவின் அசல் தேவைப்படும் என்பதால் நகல்களை மட்டுமே தாக்கல் செய்துள்ளதாகவும், தற்போது அசல் ஆவணங்கள் தான் வழக்கில் மனுதாரர்களின் தரப்பை நிரூபிக்க தேவையான முக்கியமான ஆவணங்களாகும்

என்பதால் இம்மனுவை தாக்கல் செய்துள்ளதாக கூறப்பட்டுள்ளது.

5(3). 3ம் எதிர்மனுதாரர் தரப்பில், மனுதாரர்கள் மனுவுடன் தாக்கல் செய்துள்ள ஆவணங்களில் தானும், மற்ற வாதிகளும் தரப்பினர்கள் இல்லை என்பதால் மேற்படி மனுவானது சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல என்றும், மனுதாரர்கள் மனுவுடன் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் யாவும் இந்த வழக்கிற்கு சிறிதும் அவசியமற்ற ஆவணங்கள் என்பதால் மனுதாரர்களின் மனுவானது தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது.

5(4). மனுதாரர்கள் தரப்பில் மனுவுடன் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்களின் நகல்களை தாக்கல் செய்துள்ளதாகவும், மேற்படி ஆவணங்கள் தான் மனுதாரர்களின் தரப்பை நிரூபிக்க வேண்டிய முக்கியமான ஆவணங்கள் என்றும், எனவே, அசல் ஆவணங்களை மனுதாரர்கள் தரப்பில் அசல் வழக்கில் தாக்கல் செய்ய வேண்டுமென்று கூறப்பட்டுள்ளது. ஆனால், 3ம் எதிர்மனுதாரர் தரப்பில் மனுவுடன் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் அசல் வழக்கிற்கு சம்மந்தம் இல்லாத ஆவணங்கள் என்பதால் மனுவை தள்ளுபடி செய்யவேண்டுமென்று கூறியுள்ளார் 3ம் எதிர்மனுதாரரின் கூற்றுப்படி பார்த்தாலும் கூட மனுதாரர்கள் ஏற்கனவே மனுவில் கூறியுள்ள ஆவணங்களின் நகல்களை அசல் வழக்கில் தாக்கல் செய்துள்ளார்கள். தற்போது ஏற்கனவே தாக்கல் செய்துள்ள ஆவணங்களின் அசலை தான் தாக்கல் செய்யவேண்டுமென்று கூறியுள்ளார்கள். மேலும், வழக்குகள் அனைத்தும் தகுதியின் அடிப்படையில் முடிவு செய்யப்பட வேண்டும் என்பது பொதுவான விதி. அந்த விதிக்கிணங்க மனுதாரர்கள் தரப்பு ஆதாரங்களை முன்னிறுத்த மனுதாரர்களுக்கு ஒரு வாய்ப்பு அளிப்பது நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்கும் என்றும், மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்படும் அசல் ஆவணங்களின் சங்கதிகளானது அசல் வழக்கின் விசாரணைக்கு ஏதுவாக இருக்கும் என்றும் இந்நீதிமன்றம் கருதுகிறது. இம்மனுவினை அனுமதிப்பதால் எதிர்மனுதாரர்களுக்கு எவ்வித அநீதி ஏதும்

விளைவிக்கப்படமாட்டாது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே, இந்தமனுவினை அனுமதித்து உத்தரவிடுவது தான் நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்கும் என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

6. இறுதிமுடிவு:–

**இறுதியாக, இம்மனு அனுமதிக்கப்படுகிறது. செலவு தொகை குறித்து உத்தரவு இல்லை.**

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2026ம் ஆண்டு ஜுன் மாதம் 16 ஆம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

YOGESHWARAN G Digitally signed by YOGESHWARAN G

மாவட்ட உரிமையியல் மற்றும்,
நீதித்துறை நடுவர்,
காரியாபட்டி.

மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்

இல்லை.

YOGESHWARAN G Digitally signed by YOGESHWARAN G

மாவட்ட உரிமையியல் மற்றும்,
நீதித்துறை நடுவர்,
காரியாபட்டி.

மா.உ.ம.நீ.ந.நீ. காரியாபட்டி,
IA.No. 09/2026
in
O.S.No. 18/2024
உத்தரவு
நாள். 16.06.2026